[1991 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது ஒரு மாட்டு வண்டிப் பாலமாகும். இருந்தாலும் அந்த ஆயிரம் பேர் இருக்கிற ஒரே ஒரு சிறுகுடி கிராமத்திற்குப் போவதற்குத்தான் இதன் வழிவகை அமைத்திருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் 100 பாலங்களில் அந்தத் திட்டம் தொடர்ந்திருக்குமானால், இந்த ஊரை எடுத்துக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பால வேலைகளை விரிவுபடுத்தும் நேரத்தில், உறுதிப்படுத்தும் நேரத்தில், தேவைப்படுகிற இடங்களில் ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற அளவில் அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுமா? அதற்காக ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன். காரணம், தற்போது ஒரே ஆற்றில் ரெகுலேட்டருக்காக ஒரு பாலமும், வண்டிகள் செல்வதற்காக அதன் அருகாமையில் இன்னுமொரு பாலமும் கட்ட வேண்டியிருப்பதால் நிதி வீணாகிறது. எனவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற வகையில் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அப்படித்தான் ஒரு காலத்திலே கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த யோசனையின் அடிப்படையில்தான் அரசு தன் பணியைச் செய்கிறது.

அரூரில் சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

*10564—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூரில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி அதிகமாக உள்ளதால், ஜவ்வரிசி மற்றும் மாவு சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி என்பது ஒரு இலாபகரமான சாகுபடியாக இருந்து வருகிறது. இது வறட்சிக் காலங்களிலும் மலைப் பகுதிகளிலும் கூட உற்பத்தியாகக்கூடிய பொருள். பருவ காலத்தில் அதிகப்படியான கிழங்கைத் தோண்டி எடுக்கிற காலத்தில் மார்க்கெட்டில் விலை அதிக அளவிற்குக் குறைந்து விடுகிறது. குறிப்பாக மூட்டை ரூ. 140-க்கு இருந்தது தற்போது ரூ. 80, ரூ. 90-க்கு வந்து விட்டது. அதனாலே ஒரு சேமிப்புக் கிடங்கை நாம் ஏற்படுத்தினால், அந்த விவசாயிகள் அதைச் சேமித்து வைத்து குறிப்பிட்ட காலத்தில், நல்ல விலைக்கு விற்று வருவாயைப் பெருக்க வாய்ப்பாக இருக்கும். இதை அரசு அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தர்மபுரியில் ஒன்றும், சேலத்தில் ஒன்றுமாக சவ்வரிசி மற்றும் குச்சிக் கிழங்கின் மாவுப் பொருளைப் பெற்று, விற்பனை செய்யக்கூடிய இரண்டு கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அதிலே தர்மபுரியைச் சேர்ந்த அந்தக் கூட்டுறவுச் சங்கம் கடந்த காலத்திலே சிறப்பான முறையிலே செயல்படாமல் இருந்து, தற்போது அந்தச் சங்கத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எனவே, அந்தச் சங்கத்தின் சார்பில் அந்தப் பகுதியில் சேமிப்புக் கிடங்கைக் கட்டுகிற முயற்சியில் ஈடுபடுவார்களானால் அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் தாலுக்காவில் உற்பத்தி பண்ணக் கூடிய அந்தக் கிழங்கு, நெசவுப் பாவுக்காக மிகவும் தரம் உயர்ந்தது என்றும் இந்தியா முழுவதும் இதைப் பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது. இதைப் பயன் படுத்தி அரூரிலே ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்று இங்கே அறிய விரும்புகிறேன்.

9-45 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமென்றால் அங்கே இருக்கக் கூடிய நெசவாளர்களோ அல்லது உற்பத்தியாளர்களோ முன்வந்து, தாங்களாகவே சங்கம் அமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அரசாங்கம் முன் வந்து ஒரு சங்கத்தை அமைத்துத் தர இயலாது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் இருக்கிற ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நசிந்து விட்டாலும், அந்த மாவட்டத்திலே மிக அதிக

1991 சனவரி 25]

மாக உற்பத்தி செய்கிற கிழங்கு உற்பத்தியாளர்களுக்குப் பாது காப்புத் தரவும், அந்த உற்பத்தி சிறப்பாக நடக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் மூலம் அந்தச் சங்கத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கவும், அதே நேரத்தில் உற்பத்தியாகிற கிழங்கைப் பாதுகாத்து சேமிக்க கோடவுன் கட்டித் தர வங்கியில் கடனாக நிதி ஒதுக்கினால் வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்குப் பரிந்துரைக்காக அனுப்பினால், அரசு அதைப் பரிசிலிக்கும்.

கைராட்டை நூற்புக் கூடம்.

*11292—திரு. மு. முத்தையா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம், ஓசநூத்து ஆகிய இரண்டு ஊர்களில் கைராட்டை நூற்புக்கூடம் இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஒட்டப்பிடாரம் மற்றும் ஓசநூத்து ஆகிய ஊர்களில் மூன்று கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) வினா எழவில்லை.

கழிவு நீரேற்றுத் திட்டம்.

*2231— திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளை ஒருங்கிணைத்து கழிவு நீரேற்றுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?